இந்து சமய அறநிலையத்துறை.

அனுப்புநர்
ச.சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்(கூபொ)
வேலூர்–09

பெறுநர்
1)முதன்மை கல்வி அலுவலர், வேலூர்
2)மாவட்ட கல்வி அலுவலர், வேலூர்.
3)ஆய்வாளர்,மெட்ரிக்குலேசன் பள்ளிகள், வேலூர்

ந.க.எண்:3738/ 2019/ஆ3, நாள்:13.12.2019

9582

அய்யா/அம்மையீர்,

பொருள் : மார்கழித் திங்கள் இசைத் திருவிழா(பாவை விழா) – இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் மாணவ மாணவியர்களுக்கு திருப்பாவை மற்றும் திருவெம்பாவை பண்ணொடு பாடும் போட்டிகளை மாவட்ட அளவில் நடத்துதல் மற்றும் பரிசுகள் வழங்குதல் – பள்ளி மாணவ மாணவியர்களை கலந்து கொள்ள தலைமை ஆசிரியர்களுக்கு உத்தரவிட்டு ஆவண செய்ய வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை : 1)முதன்மை செயலாளர்/ஆணையர், ந.க.எண்.70308/2019/கே3, நாள்:05.12.2019
2)இணை ஆணையர், வேலூர். ந.க.எண்.11339/2018/ஆ3, நாள்.11.12.2019

------

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள திருக்கோயில்களில் திருப்பாவை மற்றும் திருவெம்பாவை மார்கழி திங்களில் பாடுதல் வழக்கத்தில் உள்ளது எனவும், வைணவத் திருக்கோயில்களில் திருப்பாவையும், சைவத் திருக்கோயில்களில் திருவெம்பாவையும் பாடப்படுவதாகவும், இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு நிதிவசதிமிக்க திருக்கோயில்களில் திருப்பாவை திருவெம்பாவை ஒப்புவித்தல் மற்றும் கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகளை நடத்தி ஆண்டுதோறும் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டும் அதே போன்று பாவை விழா சிறப்புற நடத்திட ஏதுவாக திருப்பாவை பண்ணொடு பாடும் போட்டி, கட்டுரை போட்டி, திருவெம்பாவை பண்ணொடு பாடும் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகிய போட்டிகள் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை, ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மற்றும் ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மாவட்ட அளவில் போட்டிகள் நடத்த வேண்டுமெனவும், திருப்பாவை ஒப்புவித்தல் மற்றும் கட்டுரைப்போட்டி எனவும், திருவெம்பாவை ஒப்புவித்தல் மற்றும் கட்டுரைப்போட்டி எனவும், ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படும் முதல் மூன்று ($1^{st}$ $2^{nd}$ and $3^{rd}$)மாணவ மாணவியர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ.1000 என பரிசுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், மாவட்ட அளவில் இப்போட்டிகளை நடத்திட பெரிய திருக்கோயில் உள்ள மண்டபங்களிலோ அல்லது திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களிலோ இவ்விழாவினை நடத்த முதன்மைச் செயலாளர்/ ஆணையர் மற்றும் வேலூர் இணை ஆணையரால்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பாவை விழா எதிர்வரும் 17.12.2019 அன்று முதல் ஒரு மாத காலம் நடைபெறவுள்ளது (மார்கழி மாதம் முழுவதும்) எனவே (இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்கள் உட்பட)வேலூர்மாவட்டத்தில் உள்ள அரசு (ம) தனியார் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் விவரம் தெரிவித்து, தகுதி வாய்ந்த மாணவ மாணவியர்களை ஒவ்வொரு பள்ளியிலிருந்தும், ஒவ்வொரு பிரிவிற்கும் தேர்வு செய்து பள்ளி பெயருடன் கலந்து கொள்ளும் மாணவ மாணவியரின் பெயர் பட்டியலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி எதிர்வரும் 17.12.2019 அன்று முதல் நிகழ்ச்சியில் கலந்து

கொள்வதற்கான உரிய ஏற்பாட்டினை செய்ய தொடர்பு பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

**<u>பாவை விழா நடைபெறும் இடம்</u>**

அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி,
**நாள்:** 17.12.2019 முதல் 14.01.2020 முடிய.
**நேரம்:** மாலை 05.00 மணி முதல் 06.00 மணி வரை.

அதனால் பாவை விழா நடத்துவதற்கு சம்மந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர், திருக்கோயிலுக்கு அருகமைந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களையும், உதவி தொடக்க கல்வி அலுவலர்களையும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிவித்து அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களையும் அழைத்து வந்து பாவை விழாவில் பங்கேற்க ஆவண செய்ய செயல் அலுவலர்கள்/ ஆய்வர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாவை விழாவில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் ஆகியோர் நன்முறையில் விழா முடிந்து திரும்பும் வரையிலான ஏற்பாடுகளை ஆய்வர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் குறைவின்றி செய்து கொள்ள வேண்டுமெனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரப்படி வேலூர் (இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்கள் உட்பட) மாவட்டத்திலிருக்கும் மாணவ மாணவியர்களை ஒருங்கிணைத்து **04.01.2020அன்று காலை 10.00 மணியளவில் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படவுள்ளது.**கலந்துகொள்ளும் மாணவ, மாணவியர்களை சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியர்களுடன் இரத்தினகிரி திருக்கோயிலுக்கு அழைத்து வர வழிவகை செய்து கொள்ள செயல் அலுவலர்கள் மற்றும் ஆய்வர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், தாங்களும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும், உதவி தொடக்க கல்வி அலுவலர்களுக்கும் விவரங்களை தெரிவித்து, **1 முதல் 12–ம்** வகுப்பு வரையிலான மாணவ மாணவியர்கள் பெரும் எண்ணிக்கையில், அரசு மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளிலிருந்து கலந்துகொள்ள ஆவண செய்யுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மார்கழி மாத இறுதியில் சென்னையில் மாநில அளவிலான மார்கழி இசை திருவிழா(பாவை விழா) போட்டி நடைபெறும். இதில் மாவட்ட அளவில் ஒவ்வொரு பிரிவிலும் மேற்கண்ட நான்கு தலைப்புகளில் முதல் பரிசு வென்ற மாணவ, மாணவியர் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

**இணைப்பு:** முதன்மை செயலாளர்/ஆணையர் சுற்றறிக்கை.

ஒம்/.ச.சுப்பிரமணியம்,
உதவி ஆணையர்(கூபொ)

/ உ.ந.உ.ப/

13/12/19

தலைமை எழுத்தர்.

ச.சீ
13/12/19

பெறுநர்(தொடர்ச்சி)
1. செயல் அலுவலர், அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி.
2. அனைத்து செயல் அலுவலர்கள்/ அனைத்து ஆய்வர்கள்,
இந்து சமய அறநிலையத்துறை.

**நகல் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.**
இணை ஆணையர், வேலூர்–9.
**நகல்**
மிகை